களஞ்சியம் - KALANJIYAM
INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

# Learning Role of Kannagi in Tamil Cultural Formation

**Dr. N. Kavita**
Assistant Professor, Department of Tamil Postgraduate and Advanced Studies, Ethiraj Women's College (Autonomous), Chennai. Email: janagapriya84@gmail.com

**Abstract:**

Following the collapse of the matriarchal society, gender disparities and inequalities became more pronounced. This article explores how linguistic efforts were employed to reinforce the principle of chastity expected of women within society. It specifically addresses how customs, enduring symbols regarded as myths, and narratives surrounding chastity kings contributed to shaping the character and virtuous self-image of Kannagi, along with the creative methods utilized in this process.

Key words: Kannagi, Tamil Culture, Tamil History, Kannagi, Chastity Theory, Self-Esteem, Cultural Regeneration, Myth

# பண்பாட்டு உருவாக்கத்தில் கற்பும் கண்ணகியும்

**முனைவர் ந.கவிதா**
**உதவிப் பேராசிரியர், தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத் துறை, எத்திராஜ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.**

## ஆய்வுச் சுருக்கம்

தாய்வழிச் சமூகத்தின் சிதைவுக்குப் பிறகு பாலின வேறுபாடும், ஏற்றத்தாழ்வுகளும் தீவிரப்பட்டன. இந்த வேறுபாட்டில் பெண்ணுக்கு வலியுறுத்தப்பட்ட கற்பு எனும் கோட்பாட்டைச் சமூகத்தில் நிலைநிறுத்த மேற்கொள்ளப்பட்ட மொழிசார் முயற்சிகள் குறித்த வெளிப்பாடுகளை இக்கட்டுரை காண்கின்றது. குறிப்பாக வழக்காறுகள், தொன்மங்களாக நிலைத்திருக்கும் குறியீடுகளும், கற்புக்கரசியர் குறித்த கதைகளும் கண்ணகியின் பண்புருவாக்கத்தையும் கற்புத் தன்னிலையையும் உருவாக்கத் தொழிற்பட்ட விதத்தையும் அதற்குப் பயன்பட்ட படைப்பாக்க உத்தியையும் குறித்த பார்வையை முன்வைக்கின்றது.

## திறவுச் சொற்கள்:
கண்ணகி, கற்புக் கோட்பாடு, தன்னிலை உருவாக்கம், பண்பாட்டு மீளுருவாக்கம், தொன்மம்.

## முன்னுரை

சங்க இலக்கியத்திற்குப் பின் தோன்றிய அற இலக்கியங்களும் பக்தி இலக்கியங்களும் மக்களைப் பெறுதல், அன்பு செய்தல், சுற்றம் ஓம்புதல், இல்லத்தைப் பேணுதல், கற்பொழுக்கம் தவறாதிருத்தல், கணவன் சொற்கேட்டல், எதிர்பேசாதிருத்தல் எனும் குணங்களையே பெண்ணுக்குத் தேவையான குணங்களாகச் சொல்கின்றன. கணவனை மகிழ்வித்தலே பெண்ணின் தலையாய கடமையெனவும் கூறுகின்றன. சிலப்பதிகாரமும் மேற்கூறிய தன்மைகளோடு, கண்ணகி என்னும் முதன்மைப் பாத்திரத்தைக் கற்பு என்னும் நெறியோடும் பொறையுடைமை என்னும் பண்போடும் பின்வரும் சமூகத்திற்கு முன்மாதிரிப் பெண்களைப் படைத்தளித்திருக்கின்றது. இவ்வாறு படைக்கப்பட்ட சமூகவயமாக்கப்பட்ட தன்னிலைகள் மொழியிலும் வழக்காற்றிலும் குறியீடுகளாக நின்று பண்பாட்டு ஒழுங்கை வலியுறுத்தத் துணைநிற்கின்றன.

## அருந்ததி என்னும் குறியீடு

மாநாய்கனின் குலக்கொம்பரான பன்னிரெண்டு வயதுடைய கண்ணகி பொற்கொடியாக, திருமகளின் வடிவுடையவளாக, மாதர்களால் தொழுதேற்றப்படும் பெருங்குணங்களை விரும்பி ஏற்பவளாக அறிமுகப் படுத்தப்படும் பொழுதே அவளது கற்பின் திறன் சொல்லப்படுகிறது.

தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் (1:26)

இவள் இவ்வுலகில் கற்பின் பெரும் பண்புகளால் தன் பெயரை நிலைநாட்ட விருக்கும் கண்ணகி எனப் பாத்திரத்தின் பயன் இவ்வகையில் தொடக்கம் கொள்ள,

‘அம் கண் உலகின் அருந்ததி அன்னாளை’ (1:83)

‘சாலி ஒரு மீன் தகையாளை’ (1:51)

என மீண்டும் மீண்டும் அவளது பண்பு அருந்ததியை நிகர்த்ததெனச் சுட்டப் பெறுகிறது.

அருந்ததி கற்பின் குறியீடாவதும் பின் அது கண்ணகிக்கு ஏற்றப்படுதலும் கண்ணகி கற்பின் குறியீடாவதுமாக இக்குறியீட்டுச் செயல்பாடு இச்சமூகத்திற்குத் தேவையான கற்புத் தன்னிலைகளை உருவாக்குவதில் பெரும் பங்கேற்பதைக் காண முடிகிறது.
வழக்கில் இருந்த கண்ணகி கதை சமூக உருவாக்கத்தின் தேவை கருதி, சிலப்பதிகாரம் எனும் காப்பியமாகப் பத்தினிகளின் கதைகளை முன் மாதிரிகளாகச் சொல்லி,

அவர்களைப் போன்ற பெண் தன்னிலைகளை உருவாக்கும் மொழியைத் தனதாக்கியிருக்கிறது.

> ***“முதல் படிநிலையில் இயற்கையிலுள்ள அருந்ததி விண்மீன் ஆளுருவாக்கம் செய்யப்படுகிறது. இரண்டாம் படிநிலையில் அருந்ததி விண்மீன் சமூக ஒழுங்குக்குள் கொண்டுவரப்பெறுகிறது. மூன்றாம் படிநிலையில் சமூக ஒழுங்குக்குள் கொண்டுவரப்பெற்ற அருந்ததி என்ற பெண்ணுக்குக் கற்புருவம் ஏற்றப்படுகிறது. அது பின்னர் கதையாடலாக மாறி வழக்காறுகளில் இடம் பெறுகிறது” - ராட்கிளிப் பிரவுன்***

அருந்ததி என்ற விண்மீன் பெண் ஆனமைக்கான விளக்கம் மகாபாரதத்தில் வன பருவத்தில் இடம்பெறுகிறது. சப்தரிஷிகள் பூவுலகில் நடத்திய யாகத்திற்கு வந்த அக்கினி, சப்தரிஷி பத்தினிகளை விரும்ப, அவ்விருப்பம் நிறைவேறாததால் தற்கொலை செய்துகொள்ளக் காடு சென்றான். அங்கிருந்த சுவாஹா என்ற பெண் அக்கினியை விரும்பினாள். அக்கினியின் தற்கொலை முயற்சியைத் தடுக்க எண்ணி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பத்தினி உருவில் ஆறு நாட்கள் அவள் அக்கினியைக் கூடினாள். ஆனால் வசிட்டரின் மனைவியான அருந்ததியாக மட்டும் அவளால் உருமாற இயலவில்லை. அருந்ததியின் கற்பை உணர்த்தும் இதிகாசக் கதை இது. இக்கதை பிற்காலத்தில் கற்புத்திறமிக்க பெண்களைக் குறிப்பிடுவதற்கான குறியீடாக மாறி மொழியின் வழியாகப் பண்பாட்டில் நிலைத்துவிட்டிருக்கிறது.

> ***தன்னிலை என்பது பண்பாட்டு மொழியால் கட்டமைக்கப்படுவது. பின்னமைப்பியல் சிந்தனையாளரும் உளப் பகுப்பாய்வாளருமான லக்கான், மொழியே மனிதத் தன்னிலையைக் கட்டமைக்கிறது என்று குறிப்பிடுகிறார். இதனை இன்னொரு முறையில் சொல்வதெனில் பண்பாடு எனும் மொழியே மனிதத் தன்னிலையைக் கட்டமைக்கிறது.***[1]

இவ்வாறு பண்பாட்டில் நிலைத்துவிட்ட கற்பிதங்களால் உருவாக்கப்பட்ட தன்னிலைகள், அந்தச் சமூகத்தின் சித்தாந்தத்திற்கேற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்கின்றன.

கண்ணகியின் அறிமுகத்தைத் தொடர்ந்து கோவலனால் அழகுநலம் பாராட்டப்படும் முறை, கண்ணகிக்கு இனி வளர்த்தெடுக்கப்பட இருக்கும் கடவுள் பண்புகளுக்கு ஏற்பவே அமைகிறது.

சிவபெருமான் தன் பிறைமதியை உனக்கு நெற்றியாகத் தந்தானோ?

மன்மதன் கரும்பு வில்லை இரண்டாக்கி புருவங்களாகத் தந்தானோ?
இந்திரன் தன் வச்சிரத்தை இடையாகத் தந்தானே?
ஆறுமுகக் கடவுள் தன்வேலினை இரு கண்களாகத் தந்தானோ?

எனக் கண்ணகியின் அவயங்களைப் புகழ்ந்து பாராட்டும் கோவலன், காதல் மொழிகளால் ஐம்புலன்களுக்கும் உடையவையாய் அவள் நலம் பாராட்டுகையில், கண்ணகியைக் கிடைத்தற்கரிய ஒரு பெரும் பேறாகக் காண்கிறான். ஆனால் இக்களிப்பு அவனுக்கு நீண்ட காலத்திற்குரியதாய் வேண்டியிருக்கவில்லை.

**பொறையுடைமை என்னும் பெரும் பண்பு**

கோவலன் மாதவியின் பொருட்டு, கண்ணகியைப் பிரிந்துவிடத்துத் தன் பொறையால் அமைதி காத்த கண்ணகி, கணவனிடத்துக் குறைகாணா இயல்புடையவளாகவே படைக்கப்பட்டிருக்கிறாள். அவன் பிரிவில் தன் நலம் பேணாமல் துயரம் தாங்கி, மங்கல அணி தவிர்த்துப் பிற அணி புனையாதவளாய் நிற்கும் கண்ணகியைப் போலவே, அந்நகரில் கணவனைப் பிரிந்து தனிமையிலிருக்கும் பிற இல்லாள்களும் அணிதுறந்து துயிலறியாக் கண்களோடு இரவினைத் துயரில் கரைப்பவர்களாகவே இருக்கிறார்கள். மாதவியை விட்டுக் கோவலன் பிரிய நேரும் முன் கண்ணகிக்கு நேரும் கனவு குறித்த அச்சத்தை நீக்கும் வழியை தேவந்தி கூறுகிறாள்.

“சோம குண்டம், சூரிய குண்டம், துறை மூழ்கி
காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்து, தையலார்; (9: 59-61)

காவிரி கடலோடு கலக்கும் சங்கமத் துறையிலே தாழைகள் மலர்ந்திருக்கும் நெய்தலங்கானலிலே சோம குண்டம், சூரிய குண்டம் எனும் இரு புண்ணியப் பொய்கைகள் உள்ளன. அவற்றில் நீராடிக் கரையிலுள்ள காமவேளைத் தொழும் மகளிர் இம்மையில் தம் கணவரோடு கூடி இன்புறுவதோடன்றி, மறுமையிலும் இன்பம் தரும் போக பூமியில் போய்ப் பிறந்து இன்பம் எய்துவர். ஆதலால் நாம் இருவரும் ஒரு நாள் அவற்றில் நீராடி வருவோம் என்கிறாள். அதற்குக் கண்ணகியோ,

‘பீடு அன்று’ என இருந்த பின்னரே (9:64)

இவ்வாறு செய்வது எனக்குப் பெருமை உடையதன்று என மறுக்கிறாள்.

***“கணவனைப் பெறுவதெனில் தன் பொறையாகிய பெருந்தவத்தால் பெறுதல் வேண்டுமே அன்றி, வேறொரு கடவுளை வணங்கி அவனைப் பெறுவது***

> ***பெண்மைக்குப் பீடு தராது எனக் கண்ணகி உரைப்பது அவளது கற்பின் திண்மையை உணர்த்துகிறது"*** [2]

கண்ணகி 'பீடன்று' என மறுத்ததன் பொருள் பின்னாளில் அவள் கடவுள்களாலும் விரும்பப்படும் பெண்ணாவாள். அதற்கு அவள் கொண்ட தகுதி பிறதெய்வம் தொழாது கணவனைத் தொழுதவள் என்பதே.

> ***"கல்லிலிருந்து சிற்பங்கள் செதுக்கி எடுக்கப்படுவது போல, சமூக நாடகத்தின் பாத்திரங்கள் உருவாக்கப்படுகின்றன. கருத்தியல் என்பது ஒரு நடைமுறை என்பார் அல்தூசர். பெண் என்பாள் இவள், பெண்ணின் நடத்தைகள் இவை இவை என்பது வரையறுக்கப்படுகிறது. கற்பு எனில் இது. கற்புடை நங்கையின் செயல்பாடுகள் இவ்வகைப்பட்டவை என எடுத்துரைக்கப்படுகின்றன."*** [3]

இக்கருத்தின்படி கற்பிற்குரிய பெண்ணின் இயல்பு கணவனுக்காகக் காத்திருத்தலே அன்றி வழிபாடு செய்து பெறுவதன்று எனும் கருத்தியலைக் கண்ணகி எனும் தன்னிலை முன் வைக்கிறது.

மதுரையை நோக்கிய இவர்களது பயணத்தில் கவுந்தியடிகளும் இணைந்துகொள்ள, கண்ணகியின் பாத்திரம் அரும்பண்புகளால் வளர்த்தெடுக்கப்படும் சூழல்கள் உருவாகின்றன. வேட்டுவ வரியில் தெய்வம் ஏறப்பெற்ற சாலினி,

> 'இவளோ கொங்கைச் செல்வி; குடமலை ஆட்டி
> தென் தமிழ்ப் பாவை; செய் தவக் கொழுந்து
> ஒரு மா மணி ஆய், உலகிற்கு ஓங்கிய
> திரு மா மணி எனத் தெய்வம் உற்று உரைப்ப (12: 47-50)

எனப் புகழ்கிறாள். கண்ணகியோ இப்புகழுரை கேட்டு இம்மூதறிவுடையாள் தெய்வமேறிய மயக்கத்தில் ஏதேதோ கூறிப் பிதற்றுகிறாள் என நாணமுற்றுக் கணவனின் முதுகுக்குப் பின் ஒடுங்கிக் கொள்கிறாள். இவ்வாறு வளர்த்தெடுக்கப்படும் கண்ணகியின் பாத்திரம், அருகதேவனைத் தவிர வேறு யாரையும் வணங்காத வேறு தெய்வத்தின் பெயரைக்கூட மொழியாத கவுந்தியடிகளின் வழி மீண்டும் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுகிறது. கவுந்தியடிகள் மாதரியிடம் கண்ணகியைப் போற்றி அடைக்கலமாகக் கொடுக்குமிடத்து,

> "கற்புக் கடம் பூண்ட இத்தெய்வம் அல்லது
> பொற்பு உடைத் தெய்வம் யாம் கண்டிலமால்" (15:143-144)

எனக் கூறிக் கண்ணகியைக் கடவுளாகக் காண்கிறார். கற்பு நெறியை அணியாகக் கொண்ட இத்தெய்வத்தைக் காட்டிலும் சிறந்த ஒளிபொருந்திய தெய்வத்தைத் தான் கண்டதில்லை என்கிறார். அத்துடன் கற்புடைய பெண்கள் வாழும் நாட்டில் வானம் பொய்யாது; நிலம் தன் வளன் குறைவுபடாது; நெடுநிலம் ஆளும் வேந்தரின் வெற்றியும் தவறாது என்று சான்றோர் மொழிவர் எனச் சமூகத்தின் நம்பிக்கையும் உடன் உரைப்பவராகிறார். இவ்வாறு நாட்டின் வளமும் குறிப்பாக மழையும் பெண்ணின் கற்பும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதெனக் கருதும் நம்பிக்கையை, இக்காப்பியத்திற்கு முந்தையதான சங்க, அற இலக்கியங்களிலும் காணப்பெறுகிறோம்.

> ‘கணவரைத் தப்பாராய் அவர் தெய்வமென வணங்கி எழுந்தால் ஐயன்மார்தாம் வேட்டை தப்பார்’ (குறிஞ்சிக் கலி: 3: 11-18)
> ‘பிற கடவுளை வணங்காமல் கணவனைத் தொழும் பெண்ணுக்கு மழையைப் பெய்விக்கும் ஆற்றல் உண்டு.’ (திருக்குறள் : 55)

இவ்வாறு பெண்ணின் கற்பும் வளமும் ஒன்றுக்கொன்று தொடர்புடை யவையாகக் கருதப்பட்ட சமூகச் சூழலை சிலம்பின் வழியும் காணலாகின்றது.

> ***‘பெண்ணுக்கு மிக அடிப்படையானதும் மிக உயரியதுமான ஒரு நெறி கற்பு மட்டுமே. கற்பே ஒரு பெண்ணை மனித நிலையிலும் தெய்வ நிலையிலும் பொருந்தியிருக்கச் செய்வது. கற்பு பற்றிய தமிழ்க் கோட்பாடும் ஆரியக் கோட்பாடும் மிக நெருக்கமானவை. பெண்ணுக்கு சமயம் சார்ந்த, இறைமை சார்ந்த தனித்த கடமைகளோ ஈடுபாடோ தேவையில்லை என்பதில் இரண்டும் ஒன்றே போலான விதிமுறைகளை முன்வைக்கின்றன. கணவனுக்குப் பணி செய்வதன் மூலம் வீடுபேறு அடைதல் பெண்ணுக்கு வகுக்கப்பட்ட தெய்வீகக் கடமையாக உள்ளது’***[4]

இக்கருத்தின்படி, பெண்ணுக்கான மிக உயரிய நெறியான முன்வைக்கப்படும் கற்பினால் கண்ணகி தெய்வநிலைக்கு உயர்த்தப்படுகிறாள். இம்மாநிலத்திற்கான முன்மாதிரிப் பெண் தன்னிலையாக அவளது பாத்திரம் அவளைப் போன்ற தன்னிலைகளை உருவாக்கும் கருத்தியலுக்கு உயிரூட்டுவதாக அமைந்திருக்கிறது.
கண்ணகியைப் பாராட்டும் விதத்தில் கோவலனின் வார்த்தைகள் மதிப்புமிக்கவையாக உயர்வதையும் காண முடியும். கண்ணகியின் அழகு பாராட்டப்பட்ட விதத்திலிருந்து கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி எனும் வரிகள் முற்றிலும் மாறுபட்டவை. ஏனெனில் கண்ணகி கடவுட்தன்மையை நோக்கிய படிநிலைகளில்

வளர்த்தெடுக்கப்படும் செயல் பிரதியில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை இவ்வரிகள் காட்டுகின்றன.

தன் கணவனின் கொலைக்கு நியாயம் வேண்டி காய்கதிர்ச் செல்வனிடம், என் கணவன் கள்வனா எனக் கண்ணகி வினவ, நின் கணவன் கள்வனல்லன் இவ்வூரைத் தீ உண்ணும் என்று பதிலுரைத்தான். செங்கோல் வளைந்த இம்மன்னனின் ஊரில் வாழும் கற்புடைய பெண்டிரை நோக்கி, குற்றமற்ற என் கணவனை உயிருடன் காண்பேன் என சூளுரைக்கிறாள். அதே போன்று கணவனைக் காண்கிறாள்.

மதுரை மாநகர மக்கள்,

> ‘செம்பொன் சிலம்பு ஒன்று கை ஏந்தி நம்பொருட்டால்
> வம்பப் பெரும் தெய்வம் வந்தது!’ (19: 23-24)

என்றார்கள்.

கோவலனுக்காக நியாயம் கேட்டு அவைக்கு வந்த கண்ணகியின் சீற்றம் கொண்ட கோலம் கொற்றவையாக, பிடாரியாக, பத்ரகாளியாக அவளைக் காணுமாறு செய்தது. தேரா மன்னா! என அழைத்து சிபிச் சக்ரவர்த்தியும் மனுநீதிச் சோழனும் ஆட்சி செலுத்திய புகாரின் பெருமை கூறி, தான் கொலைக்களப்பட்ட கோவலனின் மனைவி என அறிமுகத்தோடு வாய் திறந்து பேசாக் கண்ணகி நீண்ட உரைகளை ஆற்றுவது இந்தச் சூழலில்தான். கணவன் உயிர் துறக்க ‘கணவனை இழந்தோர்க் காட்டுவது இல்’ என இணை அடி தொழுது வீழ்ந்தாள் கோப்பெருந்தேவி.

கண்ணகி தன் கற்பியல்புக்கு முன்னோடிகளெனச் சொன்ன பத்தினியர் கதைகள், கண்ணகியின் கற்புத் திறம் மீது கொண்ட நம்பிக்கைக்கும் அவள் கொண்ட பேராற்றலுக்கும் துணைசெய்பவையாய் நிற்கின்றன. அந்தப் பத்தினியர், தன் கணவனைத் தவிர வேறு யாரும் தன் அழகைக் காணாதவாறு கல்லாக, குரங்காக மாற்றியவர்கள். தன் கற்பால் கிணற்றில் வீழ்ந்த குழந்தையை மீட்டவள், ஆற்றில் தொலைந்த கணவனை மீண்டும் கண்டடைந்தவள் என வரும் கதைகள், கண்ணகியின் கற்புக்கு உள்ள ஆற்றலை உறுதிசெய்த, கற்பின் திறத்தால் செயல்கரிய காரியங்களைச் செய்யவும் துணிவைக் கொண்ட பெண்களைக் கண்ணகிக்கு முன்னுதாரணங்களாகச் சொல்கின்றன.

> ***“பெண்ணுக்கான கற்பு இரண்டு நிலைகளில் வரையறுக்கப்படுகிறது. தன்னைப் பேதமையுடன் வைத்தக்கொண்டு, வேறு ஆண் எவனையும் நினைவிலும் விழையாமல் இருத்தல் இயல்பான கற்பு. தனது ஆண் பிற பெண்களைச்***

***சேர்ந்தபோதும் வேறு வகையான துன்பங்களைத் தந்த போதும் பொறுத்துக் கொண்டு அவனுக்கு இன்பம் அளித்தல் தெய்வக் கற்பு; பெருங்கற்பு.”[5]***

கண்ணகி இவ்வாறு தெய்வக் கற்புடையவளாகிறாள்.
கண்ணகி தன் சூளின்படி,

யான் அமர் காதலன் - தன்னைத் தவறு இழைத்த
கோநகர் சீறினேன்; குற்றமிலேன் யான் என்று
இடமுலை கையால் திருகி, மதுரை
வலமுறை மும் முறை வாரா, அலமந்து
மட்டு ஆர் மறுகின் மணி முலையை வட்டித்து
விட்டாள் எறிந்தாள், விளங்கு இழையாள்' (21: 41-45)

தான் கொள்ளும் கோபம் குற்றமற்றது என்று கூறி இடமுலை திருகி எறிந்த கண்ணகி முன் அக்கினித் தெய்வம் தோன்றி, மதுரையை எரிக்கும்படி முன்பே ஏவல் பெற்றிருந்ததைக் கூறிற்று. பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி எனுமிவர் தவிர்த்து தீய தன்மையுடையோர் பகுதியைத் தீ உண்டது. கண்ணகி தன் இடமுலை திருகி எறிந்ததைக் குறியீட்டு ரீதியில் அணுகும் ஆய்வாளர்கள் மனித உடலில் இடப்பக்கம் பெண் தன்மை உடையது. எனவே கண்ணகி தன் பெண்மையைத் தன்னிடமிருந்து புறக்கணித்ததன் குறியீடாக இதைக் காண்பர்.

***வளமை இழப்பு, தாய்மை இழப்பு என்பதும் கொங்கை குறைபடுதல் என்பதும் பஞ்சம் முதலான வறுமை அந்நாட்டைத் தாக்க வேண்டும் என்ற விழைவின் குறியீடாகவும் பீ. நசீம்துன் (1962:28) குறிப்பிடுகிறார்.[6]***

கண்ணகியின் பொறுமைமிகு பெண்ணியல்பு, தன் கணவனுக்கு நேர்ந்த அநீதிக்காகப் பேராற்றல் கொண்டதாக மாறுவது, அன்றைய சமூக உருவாக்கத்தில் இடம்பெற்ற கருத்தியலுக்கு ஏற்பத் தன்னிலைகளையும் அத்தன்னிலைகளுக்கான முன்மாதிரிகளையும் உருவாக்கி கூட்டுத் தன்னிலைகளைப் பிரதிசெய்வதன் நோக்கத்தையே உள்ளடக்கியிருக்கிறது.

***மரபால் உருவாக்கப்பட்டதும் மொழியால் கட்டமைக்கப்பட்டதுமான தனது தன்னிலையை முன்னிறுத்திச் சிந்திக்கும் பெண்ணுக்கு ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு சோதனை வைக்கப்படுகிறது. தன் மேல் சுமத்தப்பட்ட இப்பெண்ணடையாளத்தை ஏற்றுக் கொள்வது அல்லது பலியிடுவது, தான்***

***உருவாக்க நினைக்கும் தன்னடையாளத்தை உறுதிப்படுத்துவது அல்லது பலியிடுவது என இருமுனைப்பட்ட போராட்டமாக அது அமைகிறது’*** [7]

கண்ணகியின் தன்னிலை இத்தகைய போராட்டத்தையே எதிர்கொண்டது. பொறையும் கற்பொழுக்கமும் நாணமும் எதிர்பேசா அமைதியும் கொண்ட கண்ணகியின் ஒடுக்கப்பட்ட அதாவது சமூகக் கருத்தியலுக்கு ஆட்பட்டு, கலாச்சார விழுமியங்களைத் தன் வயப்படுத்திப் பொற்புடை நெறிமையைக் கொண்ட அவளது தன்னியல்பு இங்கு மீறலாகப் பிளவு பெற்றது. அதோடு தன் பெண்மையின் அடையாளமான முலையை இழந்து தன் அடையாளத்தையும் துறந்தது.

சமூக உருவாக்கத்தில் மக்கள் எந்த நம்பிக்கைகளின்படி, எந்தப் புராணங்களின்படி செயலாற்றுகிறார்களோ அந்த நம்பிக்கைகள், புராணிகங்கள் பற்றி ஓயாமல் பிரச்சாரம் செய்து அவற்றை வலுப்படுத்துவதே பண்பாட்டுச் செயலாக்கம். சித்தாந்த உறைவிடம் ‘தன்னிலை’ தான். அதாவது தனிமனித சமூகத்தில் மக்களை ‘தன்னிலையாக உருவாக்குவதே அதன் அடிப்படையான பணி’ சித்தாந்த மனப்பாங்குகள் சமூகம் சார்ந்த நிறுவனங்களில் உருவாக்கி வளர்க்கப்படுகின்றன. அல்தூசர் இம்மாதிரியான பண்பாட்டு நிறுவனங்களை *Cultural apparatus* என்கிறார்.

### ஆய்வு முடிவுரை

தாய் வழிச் சமூகத்தின் அச்சமூட்டும் பெண்ணாற்றல் தந்தை மையச் சமூகத்தில் ஒடுக்குதலுக்குள்ளானதையும் கண்காணிப்புக்குள்ளானதையும் தான் கற்பு பற்றிய கோட்பாடுகள் தெரிவிக்கின்றன. பரத்தையர் வீதிகள் பெருகிய சூழல், கணவனைக் கடவுளாக முன்வைத்தல், மழைதரும் கடவுளாக கற்புடை பெண்ணைக் காணல், பாலியல் விருப்பங்களைக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி மேன்மை பேணுதல், அரசின் கனவிற்கு துணை நிற்றல், இல்லறக் கடமை வழுவாதிருத்தல், கொண்டாட்டங்களில் திளைத்தல், வெற்றிக்கென உயிர் துறத்தல், எனப் பல வகையான தன்மைகளைக் கொண்டிருந்த அச்சூழல் வாரிசுரிமையில் மிகக் கறாரானதாக இருந்தது என்பதைக் கற்புக்கரசியர் வரலாறு சொல்கின்றது. கணவனைத் தவிர்த்து வேறொரு ஆணின் பார்வை தம்மீது படாமல் பாதுகாத்துத் தன் பெண்மையை முழுமையாகக் கணவனுக்கு அளித்தல் எனும் பெண் மனோபாவம், மொழியால் தனக்கு முன் மாதிரிகளாக வைக்கப்பட்டுள்ள பத்தினியர் கதைகளிலிருந்து தனக்கான தன்னிலை இதுதான் எனத் தேர்ந்துகொள்கிறது.

தமிழ் எனும் பெருநிலம் நோக்கிய கனவில், பல்வேறு தெய்வங்கள், பல்வேறு நம்பிக்கைகள், பல்வேறு பழக்க வழக்கங்கள் என எல்லாமும் வேறாகி நின்ற சிறு நில மக்களை ஒன்றுசேர்க்கும் முயற்சிக்குத் துணை செய்ய நின்றது இளங்கோவின் கற்புக் கோட்பாடு. ஏனெனில் எல்லா நில மக்களுக்கும் பெண் எனும் பேராற்றல் பேரச்சத்தைத் தருவதுதான். அப்பெண்ணே தன் பத்தினித் தன்மையால் கடவுட் தன்மை கொண்டவளாக உருமாறும்போது வணங்குதற்குரியவளாகிறாள். எல்லோர்க்குமான மறுக்க இயலாத் தெய்வமாகக் கண்ணகி உயர்கிறாள். பெருநிலத்தைத் தன் பத்தினித் தன்மையில் இணைக்கிறாள். அருந்ததி தொன்மம் கண்ணகிக்குச் சொல்லப்படுவதும், கண்ணகியைத் திறப்படுத்த பத்தினியர் கதைகள் முன்வைக்கப்படுவதும், கண்ணகி தெய்வமாக்கப்படுவதும் வழிபாட்டுக்குரியவளாவதும், தெய்வ நிலை நோக்கிய கற்பெனும் பண்பினை வேண்டி விரும்பி அடையும் மகளிரைப் பிற்காலங்களில் உருவாக்குவதுமாக மொழிச் செயல்பாடு குறியீடுகளாக, தொன்மங்களாக நம்மிடம் அகற்றவியலாத் தன்மையோடு சமூக வயமாக்கப்பட்ட தன்னிலைகளை உருவாக்கும் பணியைச் செய்துகொண்டிருப்பதைக் காண்கிறோம்.

## அடிக்குறிப்புகள்

1. அ.கலையரசி, தன்னிலை கட்டமைப்பும் தகர்ப்பும், ப.எண்: 11.
2.ம.ரா.போ.குருசாமி, ஆய்வரங்கக் கட்டுரை
3. ந.முத்துமோகன், காப்பிய பெண்கள் மறுபார்வை, http://muthumohanwordpress.com
4. பிரேம், (தொ.ஆ), அணங்கு, ப.25.
5. மேலது
6. கு. சுதாகர், கண்ணகி கதைகள், ப.42.
7. பிரேம், பெண்வழிக் கதைகள், www.panmey.com.

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Available at: https://ngmtamil.in/kalanjiyam-tamil/index.php/kalanjiyam/article/view/85